# நியூ பாரத் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, திருவாரூர்.

www.newbharathschool.in

**வகுப்பு: மூன்றாம் வகுப்பு** **பாடம்: தமிழ்**

## இயல் ஒன்று

## தமிழ் அமுது

**சரியான விடையைத் தெரிவு செய்வோமா?**

1. நித்திலம் இச்சொல்லின் பொருள்
   முத்து
2. செந்தமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது
   செம்மை + தமிழ்
3. உன்னை + தவிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
   உன்னைத்தவிர

**தமிழ் அமுது பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோமா**

தோண்டுகின்ற - வேண்டுகின்ற

உன்னை - பொன்னோ

**கலைந்துள்ள எழுத்துகளை வரிசைப்படுத்திச் சொல்லை உருவாக்குக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொ | ள் | ன் | பொ | ரு | - | பொன்பொருள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செ | ழ் | மி | த | ந் | - | செந்தமிழ் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ண | வ | கு | ங் | - | வணங்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| போ | றி | ற் | - | போற்றி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தி | ம் | த் | ல | நி | - | நித்திலம் |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ | கி | ல் | ல | - | உலகில் |

## உன்னை அறிந்துகொள்

1. எனது நாடு - இந்தியா
2. எனது மாநிலம் - தமிழ்நாடு
3. எனது மாவட்டம் - திருவாரூர்
4. எனது ஊர் - திருவாரூர்
5. எனது மொழி - தமிழ்
6. எனது பள்ளி - நியூ பாரத் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, திருவாரூர்.
7. எனது வகுப்பு - 3
8. என் ஆசிரியர் -
9. என் நண்பர்கள் -
10. வீட்டில் எனக்கு பிடித்தவை -
11. பள்ளியில் எனக்கு பிடித்தவை -
12. எனது திறமைகள் -
13. என் பெற்றோர் -
14. பெற்றோர் அலைபேசி எண் -

## மொழியோடு விளையாடு

### தொட்டால் சுருங்கி



# செயல்திட்டம்

**தமிழ் மொழியின் சிறப்பை வெளிப்படுத்தும் இரண்டு பாடல்கள்**

1. தமிழுக்கும் அமுதென்றுபேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

-பாரதிதாசன்

2. அன்னை மொழியே!
அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை
முகிழ்ந்த நறுங்கினியே!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## <u>வாங்க பேசலாம்</u>

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே

- பாரதியார்

2. இனிமைத் தமிழ்மொழி எமது எனக்கு
இன்பம் தரும்படி வாய்ந்தநல் அமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு எங்கள்
கதியில் உயர்ந்திடயாம் பெற்ற பேறு!

- பாரதிதாசன்

## <u>கூடுதல் வினா</u>

1. பொழுதெல்லாம் என்ற சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது.
பொழுது + எல்லாம்

2. இப்பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களைத் தெரிவு செய்க.

<u>உ</u>ன்னை, <u>உ</u>லகில்
<u>பொ</u>ன்னை, <u>பொ</u>ருளோ

## இயல்-2

**வாங்க பேசலாம்** **கண்ணன் செய்த உதவி**

**1. கண்ணனைப் போல நீ யாருக்காவது உதவி செய்திருக்கிறாயா? உன் அனுபவத்தைக் கூறு.**

நான் ஒருமுறை பள்ளிக்கு வரும்போது இருசக்கர வாகனம் ஒன்று பழுதாகி நின்று கொண்டு இருந்தது. வாகனத்தை ஓட்டி வந்த பெண்மணி ஒருவர் என்ன செய்வது? என்று தவித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வழியாக சென்ற யாரும் அப்பெண்மணிக்கு புதியது போல் தெரிந்தது. நான் உடனே அப்பெண்மணியிடம் வண்டி என்ன பஞ்சரா? என்று கேட்டேன். அப்பெண்மணியும் ஆம்! அவசரமாக ஆட்சியர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் குறுக்குப் பாதை என்பதால் இப்படி வந்தேன்.

ஆனால் பஞ்சராகி விட்டது. எனக்கு பக்கத்தில் ஏதேனும் ஒர்க்ஷாப் (இருசக்கர வாகன பழுது நீக்குமிடம்) உள்ளதா? உனக்கு மெக்கானிக் அண்ணனைத் தெரியும் என்று கூறி விரைந்து ஓடி அன்னை ஆட்டோ ஒர்க்ஸ் மெக்கானிக் வேல்பாண்டி அண்ணனை அழைத்து வந்தேன். அவர் சரிசெய்து கொடுத்தார்கள். அந்த பெண்மணி மிகவும் மகிழ்ந்தார்கள்.

**2. உனது ஊரில் 108 வானத்தைப் பார்த்திருக்கிறாயா? எதற்காக வந்தது? கலந்துரையாடு.**

| | | |
|---|---|---|
| முகிலன் | : | 108 வாகனத்தை பார்த்திருக்கிறேன். |
| செல்வி | : | 108 வாகனம் என்றால் என்ன? |
| முருகன் | : | அவசரகால ஆம்புலன்ஸ் அழைக்கும் எண் 108. |
| மாரி | : | எதற்கெல்லாம் 108 வாகனத்தை அழைக்கலாம்? |
| பாத்திமா | : | 24 x 7 மணிநேரமும் சேவை கட்டணமில்லாத சேவை உயிரைக் காப்பாற்றவும், விபத்துக்களின் போது அடிப்பட்டவரைக் காப்பாற்றவும் தமிழகத்தில் 6800 மருத்துவமனைகளில் 24 மணிநேர இலவச சிகிச்சை வழங்க 108 ஆம்புலன்ஸ் உதவுகிறது. |
| செல்வன் | : | வேறு என்னென்ன தேவைகளுக்கு 108 எண்ணை தொடர்பு கொள்ளலாம். |
| கந்தன் | : | மாரடைப்பு, தாய்/சிசு பிரச்சனைகள், காக்கா வலிப்பு, பாம்புகடி. |

**சரியான விடையைத் தெரிவு செய்வோமா.**

1. கதிரவன் இச்சொல் உணர்த்தும் பொருள். **சூரியன்**

2. மகிழ்ச்சியடைந்தான் இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது.
   மகிழ்ச்சி + அடைந்தான்

3. ஒலியெழுப்பி இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது.
   ஒலி + எழுப்பி

**பொருத்தமான குறியீடு.**

| | |
|---|---|
| 1. கண்ணன் பெரியவருக்குச் சாலையைக் கடக்க உதவினான். | ✓ |
| 2. கண்ணன் பள்ளிக்கு நேரத்தோடு வந்து விட்டான். | X |
| 3. பெரியவர் அலைபேசியில் 107ஐ அழைத்தார். | X |
| 4. ஆசிரியரும் மாணவர்களும் கண்ணனைப் பாராட்டினார். | ✓ |

**அகரமுதலியைப் பார்த்துப் பொருள் வேறுபாடு அறிக.**

1. ஒலி : சத்தம்
2. ஒளி : வெளிச்சம்
3. பள்ளி : பள்ளிக்கூடம்
4. பல்லி : ஒரு சிறிய உயிரி
5. காலை : அதிகாலை
6. காளை : காளை மாடு

**சரியான சொல்லால் நிரப்பிடுக**

1. ஒட்டகச்சிவிங்கி மிகவும் <u>உயரமானது</u>
2. அதன் கருத்து <u>நீளமாக</u> இருக்கும்
3. ஒட்டகச்சிவிங்கிக்கு குரல்நாண் இருந்தாலும் அதனால் சத்தம் போட்டு <u>கத்த</u> முடியாது.
4. ஒரு சிங்கத்தையே காலால் தாக்கிக் கொல்லும் அளவுக்கு <u>வலிமை</u> வாய்ந்தது.
5. ஒட்டச்சிவிங்கி <u>இலைதழைகளைத்</u> தின்னும்.

**வினாக்களுக்கு விடையளி:**

1. கண்ணன் எங்குப் புறப்பட்டான்?
   கண்ணன் பள்ளிக்கு புறப்பட்டான்.
2. பள்ளிக்கு செல்லும் வழியில் கண்ணன் யாரைப் பார்த்தான்?
   பள்ளிக்கு செல்லும் வழியில் கண்ணன் ஒரு பெரியவரைப் பார்த்தான்.
3. பேருந்து எதில் மோதியது?
   பேருந்து பக்கத்தில் இருந்த மரத்தில் மோதியது.
4. பெரியவர் எந்த எண்ணிற்கு செல்பேசியில் பேசினார்?
   பெரியவர் 108 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு பேசினார்.
5. ஆசிரியர் கண்ணனை எதற்காகப் பாராட்டினார்?
   கண்ணன் விபத்தில் சிக்கிய பேருந்தில் இருந்தவர்களுக்கு உதவினான்.
   அதனால் ஆசிரியர் பாராட்டினார்.

**<u>கூடுதல் வினா</u>**

1. ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து கூறியது யாது?

மணாவர்களே ! நீங்களும் கண்ணனைப்போல் உங்களால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்ய வேண்டும். அதுவே மகிழ்ச்சியைத் தரும். என்றார் ஆசிரியர்.

## செயல் திட்டம்

1. உன் வீட்டில் யாருக்கு என்ன உதவிகளைச் செய்கிறாய்? வகுப்பறையில் கலந்துரையாடு.

| | | |
|---|---|---|
| அசோக் | : | அம்மாவுக்கு காயப்போட்ட துணிகளை மடித்து வைப்பேன். |
| மணி | : | கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கி வருவேன். |
| ராம் | : | துணிக்கு சோப்பு போடும் போது தண்ணீர் பிடித்துக் கொடுப்பேன் |
| விஷால் | : | என் அண்ணனுக்கு ஷூ பாலிஷ் போட்டுக் கொடுப்பேன். |
| கோமதி | : | என் அக்காவின் மிதிவண்டியை துடைத்து வைப்பேன். |
| பாலா | : | என் அப்பாவின் ஸ்கூட்டரை துடைப்பேன். |
| பிரியா | : | என் அம்மாவுடன் சேர்ந்து வீட்டைச் சுத்தம் செய்வேன். |
| அஜய் | : | என் தம்பிக்கு வண்ணம் தீட்ட சொல்லிக் கொடுப்பேன். |
| சித்ரா | : | என் தம்பியின் விளையாட்டுப் பொருளை சரிசெய்து தருவேன். |

## இயல்-3 தனித்திறமை

**சரியான விடை:**

1. தகுதி இச்சொல் உணர்த்தும் பொருள் : தரம்
2. பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் : நண்பர்கள்
3. பணி இச்சொல் உணர்த்தும் பொருள் : வேலை
4. படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது : படை + தளபதி
5. எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது : எதைப்பார்த்தாலும்

**வினா - விடை**

1. காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?
   காட்டில் விலங்குகளின் கூட்டம் புலியின் தலைமையில் நடைபெற்றது.
2. புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?
   புலிராஜா, சிங்கக்குட்டிக்கு படைத்தளபதி பொறுப்பைக் கொடுத்தார்.
3. ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?
   ஆந்தைக்கு இரவுக்காவல் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது.
4. கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக்கூறியது?
   ஆமை, முயல், கழுதை போன்ற விலங்குகள் தகுதியற்றவை எனக் கரடி கூறியது.
5. இந்தக் கதையின் மூலம் நீ அறிந்து கொள்வது யாது?
   யாரையும் குறைவாக எடை போடக் கூடாது.

## செயல்பாடு எழுத்துக்களின் வகைகள்

உங்கள் பெயரிலும் உங்கள் நண்பனின் பெயர்களிலும் இடம்பெற்றுள்ள மெய்யெழுத்துக்களை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| த ம ய (ந்) தி | ச ட கோ ப (ன்) | செ (ல்) வ (ன்) | ர (ம்) யா |
| செ (ல்) வி | க ய (ல்) வி ழி | ச (த்) யா | ர (ஞ்) சி தா |

**கூடுதல் வினா**

1. வல்லின எழுத்துகள் யாவை?
   க, ச, ட, த, ப, ற
2. மெல்லின எழுத்துகள் யாவை?
   ங, ஞ, ண, ந, ம, ன
3. இடையின எழுத்துகள் யாவை?
   ய, ர, ல, வ, ழ, ள

# இயல் - 4

## கல்யாணமாம் கல்யாணம்

**ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| கல்யாணமாம் | கொண்டாட்டமாம் |
| ஊர்க்கோலமாம் | நாட்டியமாம் |
| பின்பாட்டாம் | சாப்பாடாம் |

**சரியான விடை**

1. பூலோகமெலாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   பூலோகம் + எல்லாம்
2. கல்யாணத்தில் நாட்டியமாடுபவர்.
   ஒட்டகச்சிவிங்கி
3. பாலை + எல்லாம் இதனை சேர்த்து எழுதக்கிடைப்பது.
   பாலையெல்லாம்

**இணைந்து செய்வோம்**

| | |
|---|---|
| காணவில்லையாம் காணோமாம் | வருகிறோம் வாறோம் |
| வாங்கிவைத்த வாங்கி வச்சு | பூனையை பூனைய |

# செயல்திட்டம்

**நாட்டுபுறக்கதைகள் இரண்டினை அறிந்து வருக.**

**இடிக்கும் அர்ச்சுனனுக்கும் என்ன தொடர்பு**

வனவாசத்தின் போது அர்ச்சுனன் காளபைரவ காட்டில் தவம் செய்யத் தொடங்கினான். எழுபதடிக் கம்பம் ஒன்றை நட்டு அதன் மேல் இளநீர் ஏழு வைத்து அவற்றின் மேல் ஏழு விளாம்பழங்களை வைத்தான். விளாம்பழங்களுக்கு மேல் ஏழு எலுமிச்சைகளை வைத்து அவற்றின் மேல் ஏழு கொட்டைப் பாக்குகளையும் அதற்கு மேல் ஏழு குன்றிமணிகளையும் வைத்தான்.

குன்றிமணிகளுக்கு மேல் ஏழு கடுகுகளையும், கடுகுகளுக்கு மேல் ஏழு செப்பூசிகளையும் வைத்தான். செப்பூசிகளின் மீது ஏறி நின்று செய்த தவத்தின் கோரத்தால் வெப்பம் தகித்தது. தேவர்கள் அர்ச்சுனனின் தவத்தை கலைக்க நினைத்தனர். ஆனால் மேகராசன் மின்னலை அர்ச்சுனனுக்கு மணமுடித்துக் கொடுத்து இடி அஸ்திரமும் கொடுத்தான்.

**சோம்பேறி மனிதன்**

ஒரு ஊரில் சோம்பேறி மனிதன் இருந்தானாம். எந்த வேலையும் செய்யாமல் தின்பதும், தூங்குதுவதும் மட்டும் செய்ததால் அவனுக்கு ஏகப்பட்ட வியாதிகள். வைத்தியர் வீட்டுக்குக் கூட போக முடியாமல் வைத்தியரை வீட்டுக்கு வரவழைத்தானாம்.

வைத்தியர் ஒரு பாட்டில் நிறைய சூரணம் கொடுத்து எப்போதெல்லாம் வியர்வை வருகிறதோ அப்போதெல்லாம் சாப்பிடு. சூரணம் தீர்ந்ததும் வியாதியும் படுத்திடும்னு சொன்னாராம். சோம்பேறி வீட்டுக்கு வந்து காத்திருந்தானாம். எதற்கு ? எப்போது வேர்க்குமென்று.

அப்போது அவன் மனைவி சொன்னாளாம் நீங்கள் ஏதாச்சும் வேலை செஞ்சாதான் வேர்க்கும் என்று. சோம்பேறியும் தன் துணியைத் துவைப்பது, தோட்ட வேலை செய்வது, கடைக்கு போவது, நிலத்தில் வேலை செய்வது என்று உழைக்க ஆரம்பித்தான்.

ஒவ்வொரு முறை வேர்க்கும் போது சூரணம் சாப்பிடவும் மறக்கவில்லை. கொஞ்ச நாளிலேயே வியாதி குணமடைந்து ஆரோக்கியமாக இருந்தான். ஆனால் சூரணம் பாதி தான் தீர்ந்திருந்தது. மீதியை வைத்தியரிடம் கொடுத்து விட்டு கேட்டானாம், ”எப்படி பாதி மருந்திலேயே எனக்கு குணமானது?” என்று.

அதற்கு அவர் உன் வியாதி மருந்தால் தீரவில்லை. சுறுசுறுப்பான உன் வேலைகளால் சோம்பேறித்தனம் போய் குணமடைந்து விட்டாய். நான் கொடுத்தது மருந்தே இல்லை. வெறும் துளசி, வெல்லம் மட்டுமே கலந்தது என்றார்.

# இயல் - 5 மாணவர்கள் நினைத்தால்...

**சரியான விடை:**

1. முயற்சி இச்சொல்லின் பொருள்
   இடைவிடாத உழைப்பு
2. ஆன்றோர் இச்சொல்லின் பொருள்
   பெரியோர்
3. வைத்திருந்தனர் இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது
   வைத்து + இருந்தனர்
4. வீதியெங்கும் என்ற சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது
   வீதி + எங்கும்
5. நெகிழி + அற்ற என்பதனை சேர்த்து எழுதக் கிடைப்பது
   நெகிழியற்ற
6. பாதிப்பு + அடைகிறது என்பதனை சேர்த்து எழுதக் கிடைப்பது
   பாதிப்படைகிறது

**வினா - விடை**

1. மேரி இனி யாருடன் விளையாடப் போவதாக் கூறினாள்?
   மேரி இனி அவள் வீட்டுக் கன்றுக்குட்டியுடன் விளையடப் போவதாக் கூறினாள்.
2. பசு எதனால் இறந்தது?
   பசு நெகிழியை உட்கொண்டதால் இறந்தது.
3. நெகிழியினால் ஏற்படும் தீமைகள் இரண்டனை எழுதுக.
   - மட்காத இந்த நெகிழிக் குப்பைகளால் சாக்கடைகளில் நீர்த்தேங்கி துர்நாற்றம் வீசுவதோடு, ஈ மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகி நோய் பரவுகிறது.

   - நெகிழிக் குப்பைகளை எரிப்பதால் ஓசோன் படலம் பாதிப்படைகிறது. இதனால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நேரிடியாக நம்மைத் தாக்குகிறது. இதனால் தோல் நோய்கள் ஏற்படுகின்றன.
4. நெகிழி விழிப்புணர்வு வாசகம் ஒன்றினை உருவாக்குக.
   நெகிழி நெகிழாது !
   நிம்மதி கிடைக்காது !!

## செயல்திட்டம்

1. மட்கும் பொருட்களைக் கொண்டு பைகள், கூடைகள் போன்றவற்றினை பெற்றோர் உதவியுடன் செய்து வருக.

# இயல் - 6
# துணிந்தவர் வெற்றி கொள்வர்

**சரியான விடை**

1. வகுப்பறை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   வகுப்பு + அறை
2. இகழ்ச்சி என்ற சொல் உணர்த்தும் பொருள்
   அவமதிப்பு
3. பெரிய என்ற சொல்லின் எதிர்ச்சொல்
   சிறிய
4. வெற்றி என்ற சொல்லின் எதிர்ச்சொல்
   தோல்வி
5. மண்ணைப்பிளந்து என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   மண்ணை + பிளந்து

**விடையளி (வினா - விடை)**

1. மாணவ, மாணவிகளுக்கு ஆசிரியர் அறிவித்த போட்டி என்ன?
   பெட்டியைத் தூக்கி வரும் போட்டியே ஆசிரியர் அறிவித்தது.
2. மாணவ, மாணவிகள் போட்டியில் பங்கேற்காததற்குக் காரணங்கள் யாவை?
   பெட்டி உருவ அளவில் பெரியதாக இருந்ததால் போட்டியில் மாணவர் பலர் பங்கேற்கவில்லை.
3. கவியரசியின் வெற்றிக்குக் காரணம் என்ன?
   கவியரசியின் வெற்றிக்குக் காரணம் முயற்சியாகும்.

## கூடுதல் வினா

**1. ஆசிரியரின் தன்னம்பிக்கை கருத்துகளைக் கூறுக.**

ஒரு செயலில் இறங்குவதற்கு முன் சிந்திக்க வேண்டும். ஆனால் முயற்சி செய்யாமல் இருக்கக் கூடாது. நம்மால் முடியும் என்று நம்ப வேண்டும் என்று கூறி

தோல்வியின் அடையாளம் தயக்கம்
வெற்றியின் அடையாளம் முயற்சி
துணிந்தவர் தோற்பதில்லை
தயங்கியவர் வென்றதில்லை

நாம் விதைக்கும் விதைகளில் முயற்சியுடன் மண்ணைப்பிளந்து கொண்டு வருபவையே செடிகளாகின்றன. தயங்கி நிற்பவை தங்கிவிடுகின்றன. அதுபோல கவியரசி தயங்காமல் துணிச்சலாகச் செயல்பட்டதால் வெற்றி பெற்றாள் என ஆசிரியர் கூறினார்.

## மொழியோடு விளையாடு

| | | |
|---|---|---|
| ம | - | மஞ்சள், மட்டை, மருந்து, மணல் |
| ந | - | நட்பு, நண்பன், நன்மை |
| இ | - | இமயம், இன்பம், இனிமை, இட்லி |
| உ | - | உண்மை, உழைப்பு, உறுதி, உலகம் |
| அ | - | அம்மா, அன்பு, அமைதி, அழகு |
| எ | - | எறும்பு, எண்ணிக்கை, எட்டு, எலி |
| த | - | தம்பி, தட்டு, தயிர், தக்காளி |
| க | - | கம்பி, கட்டிடம், கதவு, கட்டில் |
| ப | - | படம், பட்டம், பம்பரம், பம்பாய் |
| ஆ | - | ஆசிரியர், ஆலயம், ஆகாயம், ஆனந்தம் |

## பழமொழிகள் (செயல் திட்டம்)

1. முடியும் என்றால் முயற்சி செய். முடியாது என்றால் பயிற்சி செய்.
2. நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார், ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை.
3. முயற்சி இல்லாத இடத்தில் எதுவும் விளங்காது.
4. நல்ல காரியங்கள் தாமாக வந்து சேர்வதில்லை.
5. எதுவும் தாமாக வருவதில்லை, எல்லாவற்றையும் தேடியே ஆக வேண்டும்.

# இயல் - 7

## சான்றோர் மொழி

**சரியான விடை**

1. உரைத்தல் என்ற சொல் குறிக்கும் பொருள்
   சொல்லுதல்

2. ஈதல் என்ற சொல் குறிக்கும் பொருள்
   கொடுத்தல்

3. மிக்காரை என்ற சொல்லின் எதிர்ச்சொல்
   அறிவிலாதார்

4. இரவாது என்ற சொல் குறிக்கும் பொருள்
   பிறரிடம் கேட்டுப் பெறுவது

5. சேர்தல் என்ற சொல் குறிக்கும் பொருள்
   இணைதல்

## செயல் திட்டம்

கல்வி என்ற அதிகாரத்தில் இருந்து ஐந்து திருக்குறள் படித்து எழுதி வருக.

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
   கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

3. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத் தூறும் அறிவு.

4. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
   எழுமையும் ஏமாப் புடைத்து.

5. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை.

## இயல் - 8

## நூலகம்

**சரியான விடை:**

1. நூல் இச்சொல் உணர்த்தும் பொருள்
   புத்தகம்
2. அறிஞர் இச்சொல் உணர்த்தும் பொருள்
   அறிவில் சிறந்தவர்
3. தேனருவி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   தேன் + அருவி
4. புத்துணர்ச்சி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   புதுமை + உணர்ச்சி
5. அகம் இச்சொல்லின் எதிர்ச்சொல்
   புறம்
6. தேன் + இருக்கும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   தேனிருக்கும்

**வினா விடை**

**1. நூலகத்தின் வேறு பெயர்கள் யாவை?**

வாசக சாலை, படிப்பகம், புத்தகச்சாலை, சுவடிச்சாலை, நூல் நிலையம், சுவடியகம்

**2. நூலகத்தின் பயன்கள் யாவை?**

நம் அறிவு வளர்கிறது. நம்முடைய நேரம் பயனுள்ள முறையில் அமைகிறது. வேலைவாய்ப்புத் தொடர்பான நூல்களைப் படிப்பதால் நல்ல வேலையில் சேரவும் முடிகிறது. மூளை புத்துணர்ச்சி பெறுகிறது. தன்னம்பிக்கை ஏற்படுகிறது.

**3. நூலகத்தில் குழந்தைகளுக்கான சிறப்பம்சங்கள் என்னென்ன உள்ளன?**

குழந்தைகளுக்கான பிரிவு தனியாகவே உள்ளது. நூலகத்தில் போட்டிகளில் கலந்து கொள்பவரும், போட்டித் தேர்வினை எழுதுவோருக்காகவும் தனியே பயற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு குழந்தையும் அவரவர் வீட்டில் நூலகம் அமைக்க வேண்டும். புத்தகம் படிக்கும் பழக்கத்தை வளர்த்து கொள்ள வேண்டும்.

**4. நீ நூலகத்திற்குச் சென்று வந்ததைப் பற்றி எழுதுக.**

நான் எங்கள் ஊரில் உள்ள ஊர்ப்புற நூலகத்திற்குச் சென்றேன். அம்புலிமாமா, யானைச்சவாரி, சிறுவர் மலர், தங்கமலர் போன்ற நூல்களைப் படித்தேன். சிறுவர் மலர், தங்க மலர் பழைய புத்தகங்களில் நூலகரிடம் கேட்டு வண்ணமிட்டு மகிழ்ந்தேன். மிகவும் அமைதியாக படிக்க சொன்னார்கள். தெனாலிராமன், பீர்பால் கதைகள் படித்தேன். மகிழ்ச்சியாய் இருந்தது. என் நண்பர்களுக்கு கதைகள் கூறினேன்.

## செயல் திட்டம்

அருகில் உள்ள நூலகத்திற்குச் சென்று உனக்கு விருப்பான சிறுவர் இதழ்களைப் படித்து அதில் உனக்குப் பிடித்த இரண்டினை எழுதி வரவும்.

சுட்டி விகடன்
தங்க மலர்

## இயல் - 9

## மாட்டு வண்டியிலே...

**சரியான விடை**

1. தண்ணீர் இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது.
   தண்மை + நீர்

2. மேலே இச்சொல்லின் எதிர்ச்சொல்
   கீழே

3. வயல் + வெளிகள் - இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   வயல்வெளிகள்

4. கதை + என்ன இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   கதையென்ன

5. வெயில் இச்சொல்லின் எதிர்ச்சொல்
   நிழல்

## செயல் திட்டம்

வீட்டில் உள்ள தாத்தா பாட்டியிடம் மூன்று புதிர்களை கேட்டறிந்து குறிப்பேட்டில் எழுதி வருக.

## புதிர்கள்

1. கூரை வீட்டை பிரித்தால் ஓட்டு வீடு, ஓட்டு வீட்டுக்குள் வெள்ளை மாளிகை, வெள்ளை மாளிகை நடுவில் ஓர் குளம், நான் யார்?

தேங்காய்

2. சாப்பிட எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவேன். ஆனால் நீரைக் குடிக்க தந்தால் இறப்பேன். நான் யார்?

நெருப்பு

3. ஓயாமல் சத்தம் போடுவேன். நான் இயந்திரம் அல்ல. உருண்டு உருண்டு வருவேன். பந்து இல்லை. நான் யார்?

கடல்